# சியரா லியோனில் உள்ள சுகாதார மையங்களில் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை விரைவாக மேம்படுத்துவதற்கான ஒரு நூதன தர மேம்பாட்டு அணுகுமுறை

## சாமானிய சுருக்கம்

சியரா லியோனில் உள்ள சுகாதார மையங்களில் மேம்படுத்தப்பட்ட தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாடு செயல்முறைகளின் தேவைக்கு பதிலளிக்கும் வகையில், சியரா லியோன் சுகாதாரம் மற்றும் துப்புரவு அமைச்சகம் மற்றும் அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்துடன் (CDC) இணைந்து கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ICAP ஒரு புதுமையான வடிவமைப்போடு தர மேம்பாடு (Quality Improvement) திட்டத்தை வகுத்து செயல்படுத்தியது.

தர மேம்பாட்டிற்கான இந்த புதுமையான அணுகுமுறை விரைவான மேம்பாட்டு மாதிரி (Rapid Improvement Model) என அழைக்கப்படுகிறது.  குறுகிய காலக்கெடு மற்றும் அடிக்கடி தர மேம்பாடு குறித்த கற்றல் ஆகியவற்றின் பயன்களோடு இந்த துரிதப்படுத்தப்பட்ட வடிவமைப்பு அமைந்துள்ளது.




இரண்டு மாவட்டங்களில் (வெஸ்டர்ன் ஏரியா மற்றும் போ) அமைந்துள்ள எட்டு மருத்துவமனைகள் இந்த விரைவான மேம்பாட்டு மாதிரி அணுகுமுறையில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்பட்டன. கழிவுகள் மற்றும் கூர்மையான

பொருட்களின் அகற்றம் (Waste Management and Sharps disposal; WM ), சுற்றுச்சூழல் தூய்மை (Environmental Cleanliness;EC) மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (Personal Protective Equipment; PPE) என மூன்று நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு களங்களை மையமாக கொண்ட 37 விஷயங்களை சரிபார்க்கும் பட்டியல் ஒன்று உருவாக்கப்பட்டது.

நான்கு நாட்களுக்கு நடைபெற்ற தீவிர பயிற்சி பட்டறை நிகழ்ச்சியோடு இந்த புதிய அணுகுமுறை தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, எட்டு மருத்துவமனைகளின் பலதரப்பட்ட நோய் தொற்று தடுப்பு குழுக்கள் மூல காரண ஆய்வுகளை (Root Cause Analyses) மேற்கொண்டு சூழலுக்கு பொருத்தமான தலையீடுகள் (“மாற்றத்திற்கான கருத்துக்களை”) பற்றி கலந்தாலோசித்தன. பின்னர், முக்கியத்துவத்திற்கேற்ப மாற்றத்திற்கான கருத்துக்களை முதன்மைப்படுத்தி, நான்கு மாத கால அவகாசத்தில் அவற்றை செயல்படுத்தி அக்கருத்துக்கள் சோதிக்கப்பட்டன. வாராந்திர மேற்பார்வை வருகைகள் வாயிலாக எட்டு தர மேம்பாட்டு அணிகளுக்கு ஆதரவு அளிக்கப்பட்டதோடு அவர்தம் முடிவுகள், புதுமைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்ளவும், தர மேம்பாடு பயிற்சிகளை நினைவுபடுத்திக்கொள்ளவும் மாதந்தோறும் சந்திப்புகள் கூட்டப்பட்டன.

தலையீட்டுக் காலத்தின் போது, மேம்பட்ட உதவியாளர்கள், மேம்பட்ட துப்புரவு அட்டவணைகள், கழிவு சேகரிப்பு மற்றும் இடம் பெயர்ப்பு குறித்த ஆவணங்களில் மேம்பாடு, உருவகப்படுத்துதல் மற்றும் நேரடி சோதனைகள், சாமான்கள் குறித்த வைப்பு / கோரிக்கைகள் / வழங்கல் வழிமுறைகளை மேம்படுத்துதல், நோயாளிகள் மற்றும் அவர்தம் குடும்பங்களை ஈடுபடுத்துதல் உள்ளிட்ட பல மாற்றங்கள் சோதிக்கப்பட்டன.

இந்த திட்டத்தில் பங்கேற்ற ஒவ்வொரு மருத்துவமனையிலும் நோய் தொற்று தடுப்பு குறித்த இணக்கம் விரைவான மற்றும் நீடித்த முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. நான்கு மாத காலத்தில் 37 குறிகாட்டிகளுக்கான மொத்த இணக்கம் 67% முதல் 96% வரை அதிகரித்தது. சராசரி தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் உபயோகிப்பின் இணக்கம் 85% முதல் 89%, கழிவுகள் மற்றும் கூர்மையான பொருட்களின் அகற்றம் 63% முதல் 99% மற்றும் சுற்றுச்சூழல் தூய்மை 51% முதல் 99% வரை மேம்பட்டது.

## வெவ்வேறு பாகங்களின் ஒட்டுமொத்த இணக்கம்



**சியரா லியோனில் உள்ள சுகாதார மையங்களில் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை விரைவாக மேம்படுத்துவதற்கான ஒரு நூதன தர மேம்பாட்டு அணுகுமுறை**

**ஆசிரியர்கள்**


இல்கா ரோண்டினெல்லி *

கில்லியன் டகெர்டி

கெய்ட்லின் ஏ. மேதேவு-மேட்சன்

மேம் டுரே

அடேவாலே அகின்ஜேஜி

ஐரீன் ஓகோங்கோ

ஆமி கொல்வைட்

ஜமைன் வெயிஸ்

பிரிகெட் க்ளீசன்

மேகன் மேரி லைமன்

ஹசன் பென்யா

மிரியம் ரப்கின்

இல்கா ரோண்டினெல்லி *, அமெரிக்காவின் ஐ.சி.ஏ.பி.யில் (நியூயார்க், நியூயார்க்), தர மேம்பாட்டு ஆலோசகராக உள்ளார். கில்லியன் டகெர்டி, அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஐ.சி.ஏ.பி-யில் (நியூயார்க், நியூயார்க்) மூத்த தர மேம்பாட்டு ஆலோசகராக உள்ளார். அமெரிக்காவின் ஜான் ஸ்னோ இன்க் (பாஸ்டன்) எம் & இ ஆலோசகராக கெய்ட்லின் ஏ. மேதேவ்-மேட்சன் உள்ளார் (முன்னர் அமெரிக்காவின் நியூயார்க், நியூயார்க், ஐ.சி.ஏ.பி. சியரா லியோனில் உள்ள ஐ.சி.ஏ.பி-யில் தொழில்நுட்ப இயக்குநராக உள்ளார். சியரா லியோனில் உள்ள ஐ.சி.ஏ.பி நாட்டின் இயக்குநராக மேம் டுரே உள்ளார். அடேவாலே அகின்ஜேஜி சியரா லியோனில் உள்ள ஐ.சி.ஏ.பி.யில் தொழில்நுட்ப இயக்குநராக உள்ளார். இரீன் ஓகோங்கோ ஐ.சி.ஏ.பி சியரா லியோனில் தர மேம்பாட்டு ஆலோசகராக உள்ளார்.அமி கொல்வைட், அட்லாண்டாவிலுள்ள (அமெரிக்கா) நோய் கட்டுப்பாடு மையத்தின், சுகாதார தர மேம்பாட்டு பிரிவில் நாடு அமலாக்க குழு தலைவராக உள்ளார். ஜாமின் வெயிஸ் அட்லாண்டாவிலுள்ள (அமெரிக்கா) நோய் கட்டுப்பாடு மையத்தின் சர்வதேச நோய்த்தொற்று கட்டுப்பாட்டு திட்டத்தில் ஒரு தொற்றுநோயியல் நிபுணர். மேகன் மேரி லைமன் சர்வதேச தொற்று கட்டுப்பாட்டு திட்டத்தில் மருத்துவ அதிகாரியாக உள்ளார், பிரிகேட் கிளீசன் நோய்களுக்கான கட்டுப்பாட்டு மையம் சி.டி.சி நாட்டு அலுவலகம், ஃப்ரீடவுன், சியரா லியோன்-ல் மருத்துவ அதிகாரியாக உள்ளார். ஹசன் பென்யா சி.டி.சி நாட்டு அலுவலகம், ஃப்ரீடவுன், சியரா லியோனில் தொற்று கட்டுப்பாடு மற்றும் தொழிலாளர்

மேம்பாட்டு நிபுணராக உள்ளார். மிரியம் ராபிக்கின், MD, MPH, அமெரிக்காவின் நியூயார்க், நியூயார்க், ஐ.சி.ஏ.பி.யில் சுகாதார அமைப்புகள் உத்திகள் இயக்குநராக உள்ளார்.

**தொடர்பு ஆசிரியர்** *: இல்கா ரோண்டினெல்லி, ஆர்.என் மின்னஞ்சல்: ir2325@cumc.columbia.edu

## சியரா லியோனில் உள்ள சுகாதார மையங்களில் தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை விரைவாக மேம்படுத்துவதற்கான ஒரு நூதன தர மேம்பாட்டு அணுகுமுறை


**சுருக்கம்**

**தர சவால்:** சியரா லியோன் சுகாதார மற்றும் துப்புரவு அமைச்சகத்தின் தேசிய நோய்த்தொற்று தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவு 2015 ஆம் ஆண்டில் தேசிய தொற்று மற்றும் தடுப்பு கட்டுப்பாடு கொள்கை மற்றும் ஆலோசனைகளை அறிமுகப்படுத்தியது. ஆனால் 2017-ஆம் ஆண்டு மதிப்பீட்டில், சுற்றுச்சூழல் தூய்மை, கழிவுகள் அகற்றம், பாதுகாப்பு உபகரணங்களின் உபயோகிப்பு ஆகியவற்றின் தரநிலைகளுடனான இணக்கம் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது.

**முறைகள்:** சுற்றுச்சூழல் தூய்மை, கழிவுகள் அகற்றம், பாதுகாப்பு உபகரணங்களின் உபயோகிப்பு ஆகியவற்றை குறுகிய, ஆறுமாத காலத்தில் மேம்படுத்த, கொலம்பியா பல்கலைக்கழகம் (ஐ.சி.ஏ.பி), என்.ஐ.பி.சி.யு. மற்றும் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (சி.டி.சி) ஆகியவை விரைவான மேம்பாட்டு மாதிரி (Rapid Improvement Model) எனும் தர மேம்பாட்டு அணுகுமுறையை எட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதார மையங்களில் நடைமுறைப்படுத்தின. அனைவரையும் ஆலோசித்து இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டதோடு, செயல்திறனைக் கண்காணிக்க 37-விஷயங்களை கொண்ட சரிபார்ப்பு பட்டியல் வடிவமைக்கப்பட்டது.

தர மேம்பாடு குறித்த பயிற்சி மற்றும் வாராந்திர வகுப்புகளை பெற்றதோடு, சுகாதார மைய அணிகள் தங்கள் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கும், சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் மாதந்தோறும் கூட்டப்பட்டன. இறுதியாக நடைபெற்ற பயிற்சியில், மிகவும் பயனுள்ள யோசனைகள் மற்றும் கருவிகளின் “அறுவடை தொகுப்பு” உருவாக்கப்பட்டது.

**முடிவுகள்:** விரைவான மேம்பாட்டு மாதிரி-யை செயல்படுத்தியதில் கழிவுகள் அகற்றம் மற்றும் சுற்றுச்சூழல் தூய்மை செயல்திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும், பாதுகாப்பு உபகரணங்களின் உபயோகிப்பில் சுமாரான முன்னேற்றமும் ஏற்பட்டது. நான்கு மாத காலத்தில் 37 குறிகாட்டிகளுக்கான ஒட்டுமொத்த இணக்கம் 67% முதல் 96% வரை அதிகரித்து, அனைத்து சுகாதார மையங்களும் முன்னேற்றத்தையும் காட்டுகின்றன. பாதுகாப்பு உபகரணங்களின் உபயோகிப்பிற்கான சராசரி இணக்கம் 85%-லிருந்து 89% ஆகவும், கழிவுகள் அகற்றம் 63%-லிருந்து 99% ஆகவும், சுற்றுச்சூழல் தூய்மை 51%-லிருந்து 99 ஆகவும் மேம்பட்டன.

**கற்றுக்கொண்ட பாடங்கள்:** விரைவான மேம்பாட்டு மாதிரி-கியூ.ஐ.சி அணுகுமுறை சியரா லியோனின் எளிமையான சுகாதார அமைப்பில் சாத்தியமானதும், பயனுள்ளதும் மட்டுமின்றி நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு செயல்திறனில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது. சிறந்த நடைமுறைகள் விரிவாக்கப்படுகின்றன; பிற களங்களுக்கு இந்த விரைவான மேம்பாட்டு மாதிரி அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது.